

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை இராசிபுரம் திருச்செங்கோடு ஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக 68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறை செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ. பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி காந்தியடிகள் சாலையில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவு சார் மையத்தை சென்னையில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி.செ.இராமலிங்கம், சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.எ, மாநராட்சி மேயர் க.சரவணன், துணை மேயரும், மாநகர செயலாளருமான சு.ப.தமிழழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாநகராட்சி ஆணையர் காந்திராஜன், செயற் பொறியாளர் லோகநாதன், மாநகர நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ். இரவிசந்திரன், சிவானந்தம், ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், பகுதி செயலாளர்கள் செல்வராஜ். கிருஷ்ணமூர்த்தி, கல்யாணசுந்தரம், கண்ணன் உள்ளிட்ட மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## தமிழ்நாட்டின் தொழிற் வளர்ச்சியை உறுதி செய்யும் மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலை!

# அரசின் நல்லத் திட்டங்கள் குறித்து அவதூறு பரப்புவதா?

## தொலைக்காட்சி – சமூக வலைதளங்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு கடும் கண்டனம்!

**சென்னை, மே 31–**

**‘‘தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் சென்னை – குமரிதொழிற் தடத்திட்டபிரிவின் கீழ் மல்லியக்கரை – ஈரோடு நான்கு வழிச்சாலை குறித்து அவதூறு செய்தி வெளியிடுவதா?’’ என்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொலைக் காட்சி, சமூக வலைதளங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டப் பிரிவு, தமிழகத்தில் நிலையான தொழில் வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் மொத்தம் 20 மாவட்டங்கள் பயனடைகின்றன. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி (Asian Develoment Bank) உதவியுடன் அரசாணை (நிலை) எண்.28, நெடுஞ்சாலை (ம) சிறுதுறை முகங்கள் (எச்.எஸ்.2 துறை நாள்.06.03.2018-ல் 15 சாலைகளில் பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான ஒப்பந்தங்கள் (SPC) முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் 7 வருட பராமரிப்பும் அடங்கும் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் (Asian Develoment Bank) இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 15.08.2024 தேதியிட்ட அரசாணை (நிலை) எண் 44 நெடுஞ்சாவை மற்றும் சிறு துறைமுகங்கள் (EAP-I)) துறை நாள். 15.03.2024-ல் திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.



**மல்லியக்கரை – ஈரோடு நான்கு வழிச்சாலை!**

மல்லியக்கரை இராசிபுரம் திருச்செங்கோடு ஈரோடு சாலை (மா.தெ. எண்.79) கி.மீ 83/3510 முதல் கி.மீ 98/100 வரை (7.738கி.மீ) இரு வழிச் சாலையை கடின புருவங்களு டன் கூடிய நான்கு வழிச் சாலையாக மேம்படுத்துதல் கி.மீ 91/100 முதல் 94770 வரை இருவழிதட உயர்மட்டப்பாலம் மற்றும் கி.மீ முதல் 0933 வரை சங்ககிரிக்கு அணுகுப்பாலம் (3,403கி.மி அமைத்தல் பணிக்கு ரூ.373.15 கோடியும் நில எடுப்பு பணிக்கு ரூ.51.25 கோடியும் மொந்தம் ரூ.424.38 கோடிக்கு திருந்திய மதிப்பீடு வழங்கப் பட்டது. திருவாளர்கள் M/s ஆர்.பி.பி ரெனாட்டஸ் (ஜே.வி), ஈரோடு, தமிழ் நாடு என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு 36 மாதங்கள் ஒப்பந்த காலத்திற்கு 12.03.2027 அன்று பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளது.

**பயன்பாட்டிற்கு முதல்வர் திறந்து வைத்தார்!**

நேற்று முன்தினம் (29.05.2025) முடிவுற்ற பணியானது முதலமைச்சர் அவர்களின் காணொலி காட்சி வாயிலாக சிறப்பான முறையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப் பட்டது. இந்நிலையில் அவதூறு ஏற்படுத்தும் வகையில் செய்திகள், தொலைக்காட்சி/சமூக வலைதளங்களில் சில சமூக விரோதிகளால் பாலத்தின் தரம் குறித்து தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன..

மேற்காணும் சாலை 7.750கி.மீ நீளத்திற்கு 17.50 மீட்டர் அகல நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி தரம் உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் 3.403 கிலோ மீட்டர் நீள இருவழிதட உயர் மட்ட மேம்பாலம் புதிதாக அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இச்சாலையில் திருச்செங்கோடு முதல் பள்ளிபாளையம் வரையிலான சாலையில் பெருகிவரும் கனரக போக்குவரத்தினை எதிர் கொள்ளவும், நெரிசலை தவிர்க்கவும், தொழில் நகரமான ஈரோட்டினை இணைக்க வும் உதவுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் அமையப் பட்டுள்ள இச்சாலையின் மொத்த நீளம் - 11.153 கி.மீ ஆகும். இச்சாலை மேம்பாட்டினால் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தோக்கவாடி, காடச்சநல்லூர், சமயசங்கிலி அக்ரஹாரம் மற்றும் பள்ளிபாளையம் ஆகிய 4 கிராமங்கள் பயன்பெறுகின்றன.. மேற்படி சாலையினை அகலப்படுத்தி தரம் உயர்த்தப் பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல், பயண நேரம் மற்றும் சாலை விபத்துக்கள் குறைந்துள்ளது. இச்சாலை பணிக்காக 4.73 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் சாலை மற்றும் மேம்பாலப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணியானது சர்வதேச தரத்திலான மேற்பார்வைக் குழுவினர் அடங்கிய திருவாளர் MSV international - JSV associates Engineers, நிறுவனத்தின் மூலம் மேற்பார்வை மற்றும் தரக்கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொண்டு சிறந்த முறையில் செயலாக்கம் செய்யப் பட்டுள்ளது. பணியின் ஒவ்வொரு நிலையிலும் இந்திய அரசு நிர்ணயித்துள்ள அனைத்து விதமான தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே அடுத்த கட்டப் பணிகள் செயலாக்கம் செய்யப்பட்டு மேற்கண்ட பாலமானது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரால் 7 வருடங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட தொலைக் காட்சி/சமூக வலைதளங்களில் ஒளிபரப்பு செய்யப்பட்ட செய்தியானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது ஆகும். மேலும் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் இவை உள்நோக்கத்துடன் பரப்பப்பட்ட செய்தியாகும் என்று தொவித்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### இந்திய அளவில் சுற்றுலாத் துறையில்

# தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*சென்னை, மே 31 -*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சுற்றுலாத்துறை இந்திய அளவில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என -சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.*



*சென்னை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த ஆய்வு கூட்டதில் ஏற்கனவே நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்தும் தற்போது நடைபெற வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்த விரிவான விளக்கம் கேட்டு அறியபெற்று மேலும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும்*

*ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலக தரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பான முறையில் விரைவாக மேற் கொள்ளசுற்றுலாத்துறை அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டது.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பாக, உழவரைத் தேடி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், அகசிப்பள்ளி, மாநில எண்ணெய் வித்து நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர்) தோட்டக்கலை, வேளாண்மைத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை சார்பாக 8 விவசாயிகளுக்கு ரூ. 4 இலட்சத்து 98 ஆயிரத்து 100 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் இணை இயக்குநர் (வேளாண்மை) பச்சையப்பன், (தோட்டக்கலைத்துறை). இந்திரா, நடராஜன். கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, நாகராசன், தனசேகரன் , கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்கள் அஸ்லாம், வேல்மணி , உள்ளிட்ட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் இருந்து தூரப்பாளையம், அண்ணா புது காலனி, பகவதி நகர் ஆகிய புதிய வழித்தடங்களில் செல்வதற்காக மாநகரப் பேருந்தினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் வ.கதிர்வேல், மொடக்குறிச்சி சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், அரசு போக்குவரத்து துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### இன்று 31 ஆம் தேதி

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

*நாமக்கல், மே. 31-*

*நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.*

*அதில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் இன்று (31.05.2025 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்குகிறார். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்ட மன்ற உறுப்பினரும், மாவட்டக் கழகத் துணைச் செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*



*இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்*

*கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்தும், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமிப்பது குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் விவாதிக்கப் பட உள்ளது என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்துள்ளார்.*



கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக பொறியாளர்கள் அணி, ஒன்றிய, நகர, மாநகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கான நேர்காணல் மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, தலைமையில், கழக பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் அம்பாள் நந்தகுமார் முன்னிலையில் நடைபெற்றது.



தருமபுரி மேற்கு மாவட்டம் அடிலம் பகுதி மக்கள் குறைதீர்க்கச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி அப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினை குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸிடம் ஆலோசனை செய்து நீர் கொண்டு வர அருகில் உள்ள ஏரிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,எம்வீடி.கோபால்,பி.கே.அன்பழகன்,முன்னாள் ஒன்றிய செயாலாளர் இல. கிருஷ்ணன்,மூத்த வழக்கறிஞர்.டி.சந்திரசேகர்,மற்றும் கழகத்தினர் உள்ளனர்.